# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்.
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018


| | | |
|---|---|---|
| தரம் : 11 | **தமிழ்மொழியும் இலக்கியமும் I,II** | நேரம்: 3.00மணித்தியாலம் |
| சுட்டெண் : ............................................................ | 22 T I,II | |

**கவனிக்க :**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.

ii. 1 தொடக்கம் 40 வரையான வினா ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

iii. உமக்கு வழங்கப்பட்ட விடைத்தாளின் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த கூட்டின் உள்ளே (X) இடுக.

iv. அவ் விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

## பகுதி – I

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. ‘தண்டாமரையின் உடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டூகம்.’ இங்கு **மண்டூகம்** என்பது

1) மீன் 2) தவளை 3) பாம்பு 4) முதலை

02. ‘யாத்த தேருளைப்படு மேழை தான்’ இங்கு **மேழை** என்பது

1) பொருள் இல்லாதவன் 2) பொருள் உடையவன்
3) கொம்பில்லா சிறுவிலங்கு 4) இறை அடியவன்

03. ‘ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும் தான்புக் கழுந்தும் அளறு.’ இங்கு **அளறு** என்பதன் எதிர்க்கருத்து

1) இன்பம் 2) துன்பம் 3) கவலை 4) அளவு

04. ‘செயிருடன் வந்த இச் சேயிழை’ என்பதில் **செயிர்** என்பதன் எதிர்க்கருத்து

1) கோபம் 2) சாந்தம் 3) செம்மை 4) விருப்பம்

05. வாக்காளர் தொடர்பான சென்சஸ் (Census) நடைபெறுகிறது. **Census** என்பதற்குரிய தமிழ்ச்சொல்

1) விண்ணப்பம் 2) தொகைமதிப்பீடு 3) கருத்தரங்கு 4) வாக்குரிமை

06. சந்தூக்கின் பின்னால் ஓடிச் சென்றேன். **சந்தூக்கு** என்பதற்கு நிகரான தமிழ்ச்சொல்

1) சாவு 2) காதணி 3) பிரேதம் 4) மருந்து

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

07. பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு

1) ஆதித்தன் - ஆதவன் 2) இலட்சியம் - குறிக்கோள்
3) ஓம்புதல் - பாதுகாத்தல் 4) உளவு – வேளாண்மை

08. இன்றைய உலகில் மீடியாவின் செல்வாக்கு அதிகமாக உள்ளது. இங்கு மீடியா (Media) என்பதன் தமிழ் வடிவம்

1) இணையம் 2) தொலைபேசி 3) ஊடகம் 4) தொலைக்காட்சி

09. மயில், பெண், இறகு என்னும் பல பொருள் தரும் சொல்

1) தோகை 2) இழை 3) மங்கை 4) செட்டை

10. ஆண்கோழி சேவல் எனப்படுவது போல ஆண்நண்டு

1) போத்து 2) களிறு 3) அலவன் 4) கடா

11. பின்வருவனவற்றுள் இணைமொழியாக வரும் சொல்

1) எலும்பும் தோலும் 2) பாம்பு பாம்பு 3) கன்னங்கரிய 4) கலகல

12. காது குத்துதல் என்னும் மரபுத்தொடர் குறிக்கும் பொருள்

1) தோடு குத்துதல் 2) காதில் குத்துதல் 3) ஏமாற்றுதல் 4) செய்தி கூறல்

13. ஒரு குழுவினர் இன்னொரு குழுவினர் அறியாத வகையில் தங்களிடையே வழங்கும் சொற்கள்

1) இலக்கணப்போலி 2) இடக்கரடக்கல் 3) மங்கலம் 4) குழூஉக்குறி

14. எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் கொண்டவன்

1) ஆராய்ச்சியாளன் 2) விஞ்ஞானி 3) தீர்க்கதரிசி 4) மதியூகி

15. வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தும் பழமொழி

1) எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு.
2) இரக்கப் போனாலும் சிறக்கப்போ.
3) கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு.
4) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்.

16. சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் கணைக்கால் அளவு என்னும் பழமொழியின் கருத்து

1) சாகத் துணிந்தால் கடலில் விழலாம்.
2) சமுத்திரத்தின் சிறிதளவு நீரில் சாவு ஏற்படும்.
3) மனத்துணிவு உள்ளவன் துன்பத்தைக் கண்டு வருந்துவதில்லை.
4) துணிவு உள்ள ஒருவனுக்கு சாவு வருவதில்லை.

17. உடுக்கை இழந்தவன் கை போல என்ற உவமைத் தொடர் உணர்த்தும் பொருள்

1) கண்ணைப் பொத்துதல் 2) ஆபத்தில் உதவுதல்
3) கையை அசைத்தல் 4) உடுக்கை தேடுதல்

18. கடன் கழித்தல் என்ற அருஞ்சொற்றொடர் உணர்த்தும் பொருள்

1) கடனை செலுத்துதல் 2) கடனை இல்லாமற் செய்தல்
3) கடமையை நிறைவேற்றல் 4) கடனை கொடுத்தல்

19. ‘சின்னஞ்சிறு குழந்தை போலே’ இங்கு சின்னஞ்சிறு என்பது

1) அடுக்குத் தொடர் 2) அடுக்கிடுக்குத்தொடர்
3) இணைமொழி 4) இரட்டைக்கிளவி

20) பொள்ளென ஆங்கே புறம்வேரார் இங்கு ‘பொள்ளென’ என்னும் ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்தும் பொருள்.

1) மெதுவாக 2) விரைவாக 3) சிறிதாக 4) பெரிதாக

21) பின்வருவனவற்றுள் பகாப்பதம்

1) பாடல் 2) தேடல் 3) கடல் 4) ஆடல்

22) வேற்றுமை மெய்ம்மயக்கம் இடம்பெறும் சொல்

1) கழுத்து 2) சார்பு 3) கொக்கு 4) பட்டு

23) பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயரடை

1) மெதுவாக 2) மெதுவாய் 3) மெதுவான 4) மெதுமெதுவாய்

24) ஆல் என்னும் உருபு காரணப் பொருளில் வந்தமைக்கு உதாரணம்

1) நோயால் மெலிந்தான் 2) தங்கத்தால் செய்த காப்பு

3) கத்தியால் வெட்டினான் 4) பாரதியாரால் எழுதிய பாடல்

25) வேற்றுமைப் புணர்ச்சியாக இடம்பெறும் சொல்

1) வாழைப்பழம் 2) தலையால் வணங்கினான் 3)கருங்குவளை 4) இராப்பகல்

26) கமலா பாடசாலைக்கு செல்லவில்லை.

கமலா பரீட்சையை எழுதவில்லை.

மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

1) ஆயினும் 2) ஆனாலும் 3) ஆகவே 4) என்றாலும்

27) அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில் எந்தையுமுடையேம்…. இங்கு உடையேம் என்பது

1) படர்க்கை வினைமுற்று 2) தன்மைப் பன்மை வினைமுற்று

3) முன்னிலை ஒருமை வினைமுற்று 4) முன்னிலைப் பன்மை வினைமுற்று

28) அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி

1) பாரி, புலி, பூசல், பொய்கை

2) தாதி, திகதி, தகவல், தீமை

3) வாலை, வேலை, வலை, விடுதலை

4) காடு, கேண்மை, கனவு, கிளி

**பொருத்தமற்ற உதாரணம் இடம்பெறும் சொற்றொகுதியை தெரிவு செய்க.**

29) 1) வினையாலணையும் பெயர் - எறிந்தவன், நடந்தவன், வந்தவன்

2) வினைச்சொல் - எறிந்தான், நடந்தான், வந்தான்

3) வினையெச்சம் - எறிந்து, நடந்த, வந்து

4) இடைச்சொல் - ஐ, ஆல், அன், ஆன்

30) 1) வேற்றுமை உருபுகள் - ஐ, ஆல், கு, அது

2) உவமை உருபுகள் - போல, புரைய, ஒப்ப, அன்ன

3) இடைநிலைகள் - கின்று, கிறு, வந்து, ஆநின்று

4) விகுதிகள் - அன், ஆன், அள், ஆள்

**புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31) சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படுமென அரசியல் யாப்பில்……………….. அளிக்கப்பட்டுள்ளது.

1) உத்தேசம் 2) உத்தரவாதம் 3) பிரசித்தம் 4) நிபந்தனை

32) சம்பள உயர்வை வலியுறுத்திப் போராடிய தொழிலாளர்கள் தமது……………… அரசுக்கு சமர்ப்பித்தனர்.

1) விண்ணப்பத்தை 2) கோரிக்கையை
3) கேள்வியை 4) அறிக்கையை

33) எண்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா……………..எனப்படும்.

1) பொன் விழா 2) வைரவிழா
3) அமுத விழா 4) வெள்ளி விழா

34) திணைக்களத்தால் அனுப்பப்பட்ட…………..அதிபர் ஆசிரியர்களுக்கு வாசித்துக் காட்டினார்.

1) சுற்று நிருபத்தை 2) கட்டுரையை 3) விளம்பரத்தை 4) கதையை

**வாக்கியங்களில் முற்பகுதிக்கு பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35) பாடசாலை முகாமைத்துவக் குழுவின் அங்கத்தினர்

1) பல ஆலோசனையை முன் வைத்தது.
2) பல ஆலோசனைகளை முன்வைத்தது.
3) பல ஆலோசனையை முன்வைத்தனர்.
4) பல ஆலோசனைகளை முன்வைத்தனர்.

36. நாடகம், சிற்பம், இலக்கியம், ஓவியம் முதலிய அழகியற் கலைகளுள்

1) நாடகம், இலக்கியம் என்பவை ஆற்றல் மிக்கது.
2) நாடகம், இலக்கியம் என்பவை ஆற்றல் மிக்கவை.
3) நாடகம், இலக்கியம் என்பது ஆற்றல் மிக்கது.
4) நாடகம், இலக்கியம் என்பவை ஆற்றல் மிக்கது.

**தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

சோம்பிக் கிடப்பது தீமை – நல்ல
தொண்டு செய்யாது கிடப்பவன் ஆமை
தேம்பி அழும் பிள்ளை போல – பிறர்
தீமையை அஞ்சி நடப்பவன் ஊமை

37. புலவர் இப் பாடலின் ஊடாக பிரதானமாக வலியுறுத்த விளைவது யாது?

1) உண்மை பேசுதல் 2) பிறர்நலனுக்காக செயலாற்றல்
3) அன்பு காட்டுதல் 4) பொறுமைகாத்தல்

38. ‘‘தேம்பி அழும் பிள்ளை போல’’ என்பது

1) உருவகம் 2) உவமை 3) தன்மை நவிற்சி 4) தற்குறிப்பேற்றம்

39. இங்கு சோம்பிக் கிடத்தல் என்னும் சொல் உணர்த்தும் பொருள்

1) நோயுற்றிருத்தல் 2) துன்பமுறல் 3) உற்சாகமற்றிருத்தல் 4) தெளிவற்றிருத்தல்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் பந்தியொன்று அமையும். அதற்கேற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) கல்வியும் வாழ்வுக்கு இன்றியமையாத ஒன்றாகும்.
ஆ) செல்வம் வாழ்வுக்கு முக்கியமானது என்பர்.
இ) எனவே இரண்டையும் பெற்று உயர்வடைய வழி செய்தலே சிறந்தது.
ஈ) செல்வத்தைப் பெறவே பலர் முயற்சி செய்கின்றார்கள்.
உ) அதனைப் பெறவும் முயற்சி செய்ய வேண்டும்.

1) ஈ, இ, அ, ஆ, உ 2) இ, அ, ஆ, உ, ஈ
3) அ, ஆ, இ, உ, ஈ 4) ஆ, ஈ, அ, உ, இ

(40 X 1 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**(01) சுருக்கமான விடை எழுதுக.**

1. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
   கண்ணிலரித் தந்தைதமர் கடுநரகிற் கேயுரியர்.
2. 'இப்ப ஏலாமனெ, நேரம் பெய்ட்டு, நாளராவக்கி சொல்ரன்' என்ற பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்குக்கு மாற்றி எழுதுக.
3. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தக் குறியீடு கொண்டு அமைக்குக.
   இசைநாடகம்நடனம் போன்றல்லாமல் சினிமா முழுக்க முழுக்க தொழில்நுணுக்க வளர்ச்சியின் படைப்பு.
4. என் வெள்ளைக் கொக்கு தூங்கிக் கொண்டிருந்தது. இதில் பயின்றுள்ள அணி யாது?
5. அடியொற்றுதல் என்ற மரபுத்தொடர் உணர்த்தும் பொருள் யாது?
6. நான் பாடசாலைக்குப் போனேன். இவ் வாக்கியத்தை எதிர்மறை வினை வாக்கியமாக மாற்றுக.
7. 'அட்டும்' என்னும் வியங்கோள் வினை விகுதியை பயன்படுத்தி வாக்கியம் ஒன்று அமைக்குக.
8. இந்தப் புத்தகத்தை பலமுறை படித்தேன்.
   இந்தப் புத்தகம் எனக்குப் புரியவில்லை.
   இவ்விரு வாக்கியங்களையும் பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைக் கொண்டு இணைக்குக.

9) கண்கூடு என்ற சொல்லின் கருத்துப் புலப்படுமாறு அச் சொல்லை ஒரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

10) பாடசாலையை விட்டு விலகிய பின்னரும் மாணவர் தமது ஆசிரியருக்கு மரியாதை செய்ய வேண்டும். என்ற வாக்கியத்தில் இடம்பெறும் எழுவாய், பயனிலை என்பவற்றை எழுதுக.

(10X2=20 புள்ளிகள்)

**(02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

1) நாம் உயிர் வாழ்வதற்கு நீரே ஆதாரமாக உள்ளது. நீரின்றி அமையாது உலகு என்பர். குடிப்பதற்கு உகந்த நீரைப் பெறுவதில் உலகம் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றது. இதனைத் தீர்க்கத் தேவையான செயற்பாடுகளை பொருத்தமான வழிமுறைகளை இனங்கண்டு நிவர்த்தி செய்வது அவசியமாகும். நீர் விரயத்தைத் தடுத்து நீர்ச் சமநிலையைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் உயிர் வாழ்விற்கு ஆதாரமாகும். என்பதனை மையப்படுத்தி ஒரு விளக்கக்கட்டுரை.

2) கல்வியால் எதனையும் பெற்றுக் கொள்ள முடியும். கல்வி அறிவு பெறாத சமூகத்தில் வாழ்ந்த பெண்கள் பல அடக்கு முறைகளுக்குள் சிக்குண்டு இருந்தனர். கல்வி அறிவினால் அவர்கள் முன்னேறி வருகின்றனர். பெண் கல்வி என்ற விடயம் தொடர்பாக ஆற்றப்படும் ஒரு மேடைப் பேச்சு.

3) அரச துறைகளையே நம்பி இருந்து கல்வி கற்றவர்கள் வேலையில்லாப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். தனியார் துறையில் கால்பதித்து கற்றவர்கள் சிலர் பல முன்னேற்றம் கண்டுள்ளனர். வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளுவதில் அரச துறையே சரியானது. என்னும் ஒருவருக்கும் தனியார் துறையே சிறந்தது என்று கருதுகின்ற மற்றொருவருக்கும் இடையிலான ஓர் உரையாடல்.

4) இன்று அவன் தனிமரமாக இருக்கின்றான்…………..அவன் முன்னைய நாட்களில் எத்தனை பேருடன் பழகியிருந்தான், எத்தனை சமூக உறவுகள் இவனைத் தேடி வந்தன. எவ்வளவோ நன்மைகளை அவன் செய்திருந்தான். அவனின்இன்றைய நிலைக்கான காரணத்தை கற்பனை செய்து பொருத்தமான சிறுகதை ஒன்று எழுதுக.

(25 புள்ளிகள்)

**(03) பின்வரும் உரைப்பகுதியை 40-45 சொற்களில் அமையக்கூடியவாறு சுருக்கி எழுதுக.**

இப்பொழுது மேனாட்டு நாகரிகம் அதன் அத்திபாரத்துடன் ஆடிக்கொண்டிருக்கிறது. உலோகாயுதமென்ற மணற்றரையை அத்திபாரமாகக் கொண்ட கட்டடங்கள் எவ்வளவு மகத்தானவையாக இருப்பினும் ஒரு காலத்தில் விழுந்தே தீரும். இதற்கு உலக சரித்திரமே சாட்சியாக இருக்கிறது. மக்களுக்குப் பின் மக்கள் தோன்றி உலோகாயுதத்தை அடிப்படையாகக் கொண்டு தங்கள் நாகரிகத்தைக் கட்டினார்கள். ஸ்தூல வாழ்க்கையே உண்மையானதென அவர்கள் நினைத்தார்கள். ஒருவன் இறக்கும் போது மேல் நாட்டு மொழிகளில் அவன் உயிரை விட்டு விட்டதாகச் சொல்கின்றார்கள். ஆனால் நம்மொழியில் அவன் உடலை விட்டு விடுவதாக சொல்கின்றோம். மேல் நாட்டில் மனிதன் உடம்பென்றும் அது உயிரைப் பெறுவதாகவும் நம்புகின்றார்கள். ஆனால் நாம் மனிதன் உண்மையில் ஆத்மா என்றும் அது உடலைத் தாங்கித் தோன்றுகின்றது என்றும் நினைக்கின்றோம். இதில் மகத்தான வித்தியாசமிருக்கின்றது. சரீர சுகம் முதலிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உண்டாகப் பெற்ற நாகரிகங்கள் எல்லாம் கொஞ்சக் கொஞ்சக் காலம் நிலைபெற்றிருந்து பின் ஒன்றன் பின் ஒன்றாக உலகிலிருந்து மறைந்திருக்கின்றன. ஆனால் இந்தியாவின் நாகரிகமும் இந்தியாவிலிருந்து பெற்ற சீனா, யப்பான் தேசங்களின் நாகரிகமும் இன்னும் வாழ்ந்து வருகின்றன. அவைகளில் இக் காலத்தில் புதியதொரு மறுமலர்ச்சியும் காணப்படுகின்றது. அவை பல தடவைகள் அழிக்கப்பட்டாலும் பின்னரும் இன்னும் அதிக சிறப்புடன் கிளம்புவதைக் காண்கின்றோம். உலோகாயுத நாகரிகங்கள் ஒருமுறை அழிந்தால் மறுபடியும் அவை உயிர் பெறுவது இல்லை. ஆதலால் பொறுமையுடன் இருப்பீர்களாக எதிர்காலம் நம்மிடம்தான் இருக்கின்றது.

(10 புள்ளிகள்)

**(04) பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

இளங்கோ அடிகளால் எழுதப்பெற்ற சிலப்பதிகாரம், கம்பரால் எழுதப்பெற்ற கம்பராமாயணம் என்பன இலக்கிய நூல்கள். இந்திய சரித்திரம், பஞ்சாங்கம் என்பவற்றை இலக்கியங்களாகக் கருதுவது இல்லை. திருவள்ளுவரால் எழுதப்பட்ட திருக்குறள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய ஆசாரக் கோவை என்பவற்றுள் திருக்குறள் இலக்கியமாகும். ஆசாரக் கோவை உயர்ந்த நூலாயினும் இலக்கியமல்ல. ஆகவே இலக்கியம் தான் எடுத்துக் கூறும் பொருளிலும் அதனைக் கூறும் வகையிலும் பொதுத்தன்மை உடையதாக இருக்க வேண்டும். அனைவருக்கும் இன்பம் ஊட்டுவதாகவும் காணப்பட வேண்டும்.

1) இலக்கியம் அல்லாதன எனக்கூறப்பட்டவை எவை?
2) இலக்கியங்கள் எனக் கூறப்பட்டவை எவை?
3) இலக்கியம் ஒன்றின் பண்புகளாக கூறப்படுபவை எவை?
4) ஆசாரக் கோவை எந்தக் காலத்தில் தோன்றிய நூல்?
5) பின்வரும் நூல்களின் ஆசிரியர்களின் பெயர்களை குறிப்பிடுக.
   சிலப்பதிகாரம்
   திருக்குறள்

(2X5 =10 புள்ளிகள்)

**(05)** மாணவர்கள் பரீட்சையை எதிர்நோக்குகின்ற வேளையில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுகின்றது. மின்சாரத்தை சீராக வழங்குமாறு கோரி மின்சார சபைக்கு கடிதம் ஒன்றினை 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

**அல்லது**

சிறுவர் தினத்தை ஒட்டி மாணவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்ட சிறுவர்தின விழா தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய பத்திரிகை செய்தி ஒன்றினை 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

(15 புள்ளிகள்)

**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்.**
**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018**

| | | | | |
|---|---|---|---|---|
| தரம்: 11 | **தமிழ்மொழியும் இலக்கியமும் III** | நேரம்: 2.00 மணித்தியாலம் | | |
| சுட்டெண்:........................................ | 22 | T | III | |

**பகுதி III**

- **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**
- **இவ் வினாத்தாளுக்குரிய புள்ளி 80 ஆகும்.**

**(01) சுருக்கமான விடை எழுதுக.**

1) 'நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம் தன்மனத்தே நினைந்து செய்யும் கொடுமையால் அளந்தாளை'

அ) நெடுமையால் உலகு அளந்தவர் யார்?

ஆ) கொடுமையால் உலகு அளந்தவர் யார்?

2) 'இன்றைக் கென்னவோ செவத்தாள் பால் கறக்க விடவில்லை'

அ) இங்கு 'செவத்தாள்' எனக் குறிப்பிடப்படுவது?

ஆ) இப் பகுதி இடம்பெறும் சிறுகதை எது?

3) "கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர் ககன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்"

அ) கானவர்கள் எனக் குறிக்கப்படுபவர் யாவர்?

ஆ) காயசித்தி விளைவிப்போர் யாவர்?

4) "பெரிதினிது பேதையர் கேண்மை பிரிவின்கண் பீழை தருவதொன்றில்"

அ) பீழை என்பதன் பொருள் யாது?

ஆ) பேதையர் மீது கொண்ட நட்பு எவ்வாறானது எனக் குறிக்கப்படுகின்றது?

5) "மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு உயர்சினை மருதத்து உறையுறத் தாழ்ந்து"

அ) மாயமில் ஆயம் எனக் குறிப்பிடப்படுவது யாது?

ஆ) இப் பாடற்பகுதி இடம்பெறும் இலக்கியத்தின் பெயர் யாது?

6) "குரவரையும் கிளைஞரையும் குலத்துரிய துணைவரையும் கொன்று போர் வென்று"

அ) குரவர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

ஆ) கிளைஞர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

7) " நெஞ்சகத்தை நிறைந்திருக்கும் நிர்மலமாம் வானில்
நிறைமதி தன் துணைவியர்கள் சூழவரும் கோலம்"

அ) இவ்வடிகளில் குறிப்பிடப்படும் பொழுது யாது?

ஆ) துணைவியர்கள் எனக் குறிக்கப்படுவது எதனை?

8) ''கல்வி நலம் பெற்றனரேற் காரிகையர் காதலர்க்குச் சொல்லருநற்றுணையன்றோ''

அ) காரிகையர் எனப்படுவோர் யாவர்?

ஆ) இவ்வடிகளால் உணர்த்தப்படுவது யாது?

9) ''தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு
அவ்வகை பிறவும் கருவெனமொழிப

அ) கருப்பொருள்கள் என குறிக்கப்படுபவை யாவை?

ஆ) இச் சூத்திரம் இடம்பெறும் நூல் யாது?

10) ''ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டங்கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்''

அ) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

ஆ) இக் கூற்று இடம்பெறும் கட்டுரையை எழுதியவர் யார்?

(10X2 = 20 புள்ளிகள்)

**(02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

1) சூழு மாயவுலகினிற் காணுறுந்
தோற்றம் யாவையும் மானத மாகுமால்
ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ள தேல்
அதனுடைப் பொருள் நாளை விளைந்திடும்
தாழுமுள்ளத்தர் சோர்விலர் ஆடு போல்
தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்
வீழு மோரிடை யூற்றுக் கஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே.

அ) மானிடன் பயனை அடைய வேண்டுமாயின் அவனிடம் இருக்க வேண்டியது யாது?

ஆ) இப் பகுதியில் இடம்பெற்ற உவமை அணியை எடுத்துக் காட்டி விளக்குக.

2) சுற்றத் தார் தேவரொடும் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கி
கொற்றத்தார் குரிசில் இவர் ஆர்? என்று
குகன் வினவ கோக்கள்வைகும்
முற்றத்தான் முதல் தேவி மூன்று
உலகும் ஈன்றானை முன் ஈன்றானைப்
பெற்றதால் பெறும் செல்வம் யான்
பிறத்தலால் துறந்த பெரியாள் என்றான்

அ) கோசலையின் சிறப்பு இப் பாடலில் எவ்வாறு விபரிக்கப்படுகின்றது?

ஆ) 'கொற்றத்தார்க் குரிசில்' என்பதன் விளக்கம் யாது?

3) விரி குழல் பைந்தொடி நாணி வேத்தவையில்
முறையிடு நாள் வெகுளேல் என்று
மரபினுக்கும் நமக்கும் உலகு உள்ள அளவும்
தீராத வசையே கண்டாய்
எரிதழல் கானகம் அகன்றும் இன்னமும் வெம்
பகை முடிக்க இளையா நின்றாய்
அரவு உயர்த்தோன் கொடுமையினும் முரசு உயர்த்தோன்
உனது அருளுக்கு அஞ்சினேன்

அ) அரவு உயர்த்தோன் கொடுமை

ஆ) முரசு உயர்த்தோன் கொடுமை

ஆகிய தொடர்களை விபரிக்குக.

4) இப்படியாக சந்தி பிரிக்கப்படாத பாடல் போல் தலைசுற்றியது விவகாரம் மறுபடியும் நான் அந்தக் கடைக்குக் கம்பியூட்டரை கொத்துக் கொத்தாக ஆராய்ச்சி செய்து வித்துவான் பட்டம் பெற்ற ஒரு நண்பரோடு படையெடுத்தேன் நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர் விடுவாரா? இப்போது வட்டியும் முதலுமாக அவர்களைப் போட்டு குடையோ குடை என்று குடைந்தார். அவர்களுடைய சம்பாசனை முற்றிலும் ஒரு புதிய பாஷையில் நடைபெற்றது. ஹார்ட் ட்ரைவ், ப்ளொப்பி, மெகாபைட், சொவ்ற்வெயார், இன்ரவேஸ், யூ.பி.எஸ் என்ற வார்த்தைகளெல்லாம் எனக்கு சிதம்பர சக்கரமாய் இருந்தது.

அ) கணினி தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள அதன் பகுதிகளின் பெயர்களை எழுதுக?

ஆ) சிதம்பர சக்கரம் என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது?

5) பிறநாடுகளிலிருந்து வந்த சமய குரவர்கள் தமிழ்ப் பண்பாட்டைக் கடைப்பிடித்து இக்கண்ணோட்டத்துடன் தமிழ் மரபின்படியே இலக்கியங்களையும் இலக்கணங்களையும் யாத்தார்கள், வீரமாமுனிவர், கார்டுவெல் ஐயர், போப்பையர் போன்றவர்கள் இம் மனநிலையைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள் தமிழ் பக்தியின் மொழி என்று நான் அடிக்கடி கூறி வருகின்றேன்.

அ) வெளிநாட்டில் இருந்து வந்து சமயப்பணி புரிந்தோர் யாவர்?

ஆ) ‘‘பக்தியின் மொழி தமிழ் என்று நான் அடிக்கடி குறிப்பிட்டு வருகின்றேன்’’ இக் கூற்றுக்குரியவர் யார்?

(5X4 = 20 புள்ளிகள்)

**(03)** விவேக சிந்தாமணி பாடலில்

அ) அறிவுடையவர், அறிவில்லாதவர் செயல்கள் எனக்குறிப்பிடப்படுபவை யாவை?

ஆ) இப் பாடலில் பயன்பட்டுள்ள அணியை சான்று காட்டி விளக்குக?

**அல்லது**

தத்தை விடு தூது என்னும் இலக்கியத்தில் வரும்

அ) காதலி பற்றிய வருணனைகள்

ஆ) பெண் விடுதலை தொடர்பான கருத்துக்கள்

என்பவற்றை எடுத்துக்காட்டி விளக்குக?

(15 புள்ளிகள்)

(04) நாவலர் எழுந்தார் என்னும் கட்டுரையில்

அ) தந்தி தபாற் கட்டுக்களை எடுத்து வருமாறு நாவலர் கூறியதன் பின்னணி

ஆ) கட்டுரையாசிரியர் கையாண்டுள்ள உத்திகள்

என்பவற்றை விளக்குக.

**அல்லது**

தமிழ்ப்பண்பாடு என்னும் கட்டுரையில்

அ) தமிழர் பண்பாட்டின் அரிய சில கோட்பாடுகளாக குறிப்பிடப்படுபவை

ஆ) தமிழர் பண்பாடு தொடர்பாக எழுதுவதற்கு ஆசிரியருக்கு உதவிய நூல்கள்

என்பவற்றைக் குறித்து விளக்குக.

(15 புள்ளிகள்)

- **5,6,7 ஆகிய வினாக்களில் ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

(05) குழந்தையென எனது மனம் குதூகலிக்கும் என்று தொடங்கும் கவிதையில்

அ) இயற்கை அழகு

ஆ) மனிதர்களின் செயல்கள்

என்பன கவிஞர் மனத்தை எவ்வாறு கொள்ளை கொண்டன என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

(06) 'ஓர் தட்டிலே பொன்னும்……' என்று தொடங்கும் பாடலில்

அ) நாட்டின் வறுமை நிலை

ஆ) சீதக்காதி வள்ளளின் சிறப்பு

என்பன விபரிக்கப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(07) எது நல்ல சினிமா என்ற கட்டுரையில்

அ) தமிழ் சினிமா நாடகத்தின் செல்வாக்கினுள் கட்டுண்டு கிடப்பதற்கான காரணங்கள்

ஆ) கட்டுரையில் குறிப்பிடப்படும் இயக்குநர்களது திரைப்படங்களின் முக்கியத்துவம்

என்பவற்றைத் தெளிவுறுத்துக.

(10 புள்ளிகள்)